17.04.2026

O.S.No. 14/2021

PW1– சுடலைமாடத்தி – க/பெ. இசக்கி செட்டியார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.04.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. எனது தந்தையின் பெயர் சுடலையாண்டி செட்டியார் என்றால் சரிதான். எனது தந்தைக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல்மனைவி பெயர் மாடத்தி, இரண்டாவது மனைவியின் பெயர் மீனாட்சியம்மாள் என்றால் சரிதான். முதல்மனைவி மாடத்தியம்மாளுக்கு திருமலையாண்டி என்ற மகன் உண்டு என்றால் சரிதான். உபயவாதிகள் 2 வது மனைவியின் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தந்தை 1957 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

2. எனது தந்தை உயிருடன் இருந்த காலத்தில் பிராது தபசில் வீட்டில்தான் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். எனது தந்தை உயிருடன் இருந்தகாலத்தில் திருமலையாண்டிக்கு ஒரு ஆதரவு ஆவணம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக தான் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தினார் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 ஆவணம் வடபகுதியில் 3/4 செண்டும்,தென்பகுதியில் ¾ செண்டும் திருமலையாண்டிக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அதில் திருமலையாண்டி மேற்படி இடத்தில்கட்டிடம் கட்டி அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள

சொத்து போக மீதமுள்ள இடத்தில் நடுவில்தான் பூர்வீகவீடு இருந்தது என்றால் சரிதான்.

4. எனக்கு 1964ம் ஆண்டு எனது தாயின் சகோதரருடன் திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். 2ம் வாதிக்கு 1975ம் ஆண்டு திருமணமாகிவிட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

5. பிரதிவாதி தொலைபேசி நிறுவனத்தில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். எனது சகோதரர் தான் 2ம் வாதியின் திருமணத்தை நடத்திவைத்தார் என்றால் சரியல்ல, எனது தாய் தான் நடத்திவைத்தார். திருமணத்திற்கு 13 பவுண் நகையும், ரூ.5ஆயிரம் ரொக்கமும், பிரதிவாதி, 2ம் வாதிக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல.

6. 2ம் வாதி திருமணமாகி தாவா சொத்து அருகாமையில்தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் திருமணமாகி சென்றபின்பு எனது தாயும், பிரதிவாதியும் பிராது தபசில்சொத்தில் தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது தாய் 1997ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதற்குபிறகு எனது சகோதரர் தான் தொடர்ந்து குடியிருந்து வந்தார் என்றால் சரிதான்.

7. எனது தாய் இறந்தவுடன் 1997லேயே பிராதுதபசில்சொத்தில் நானும், 2ம் வாதியும் பாகம் கேட்டோம் என்றால் சரிதான். அவர் அப்போதே கொடுக்க மறுத்துவிட்டார் என்றால் சரிதான். எங்கள் இருவருரின் கோரிக்கையும் பிரதிவாதி மறுத்துவிட்டார் என்றால் சரிதான். அதற்குபிறகு பூர்வீகவீடு இடிந்துவிட்டது என்றால் சரிதான்.

8. பூர்வீகவீட்டின் கதவு எண் தெரியாது. பிரதிவாதி சொத்தை கொடுக்க மறுத்ததால் எப்படியும் செல்லட்டும் பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்றுவிட்டுவிட்டோம் என்றால் சரிதான். தற்போது பிரதிவாதி அதில் புதிய வீடுகட்டிவிட்டார் என்றால் சரியல்ல, பழையவீட்டில் உள்ள அறையை சீரமைத்து புதிதாக கட்டியுள்ளார். அதற்கு நாங்கள் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரிதான், நாங்கள் அவரிடம் எந்த சண்டைக்கும் செல்லவில்லை.

9. சீரமைத்த வீட்டிற்கு பிரதிவாதிதான் தீர்வை செலுத்திவருகிறார் என்றால் சரிதான். அவர் வாடகைக்கும் விட்டிருந்தார், ஒத்திக்கும் விட்டிருந்தார் என்றால் சரிதான். நாங்கள் போய் வந்துகொண்டுதான் இருந்தோம். நான் நிரந்தரமாக கடையநல்லூரில் குடியிருந்துவருகிறேன் என்றால் சரிதான்.

10. 2ம் வாதி அவர் திருமணமான வீட்டில்தான் செங்கோட்டையில் குடியிருந்துவருகிறார் என்றால் சரிதான். திருமணமானபின்பு நானும், 2ம் வாதியும் எங்கள் திருமணமான வீட்டில் தான் குடியிருந்துவந்தோம் என்றும், பிராதுதபசில் வீட்டில் பிரதிவாதியுடன் கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. மின்இணைப்பு, குடிநீர்இணைப்பு பிரதிவாதியின் பெயரில் உள்ளதா என்றால் உள்ளது, யார் பெயரில் உள்ளது என தெரியாது. பூர்வீகவீடு இடிந்தபிறகு அங்கு செல்லவில்லை. பூர்வீகவீடு, எனது தாய் இறந்து சுமார் 4 ஆண்டுகளுக்குள் இடிந்துவிட்டது என்றால் சரியல்ல, 2 ஆண்டுகள் தான் ஆகிறது.

12. எனது தாய் இறந்தபிறகு தான் பிரதிவாதி வீட்டை அனுபவம் செய்துவந்தார் என்றால் சரியல்ல, அவர் குவார்ட்டர்ஸில் தான் குடியிருந்து வந்தார், ஆனால் சாவி அவர் வசம் தான் இருந்தது.

13. பிரதிவாதி பிராதுதபசில்சொத்தை தனதுசொந்த வீடாக பாவித்து அனுபவம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. வாதிகளை தவிர்த்து அவர் மட்டுமே நீண்ட காலமாக அனுபவித்துவந்ததால் அவருக்கு அனுபவ பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல.

14. எங்கள் தாய் இறந்தபிறகு பிரதிவாதியிடம் கேட்டதற்கு அவர் மறுத்துவிடவே காலம்தாழ்த்தி தற்போதுதான் பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான்.

15. பிராதுதபசில் சொத்திற்கு கிழக்கே சிவன் செட்டியார், மேற்கே மாடசாமி செட்டியார், வடக்கே ரோடு, தெற்கே பொன்னையாத்தேவர் இடம் உள்ளது. வடக்கே உள்ள ரோடு ஆதிகாலத்தில் இருந்ததைவிட தற்போது அகலமாக உள்ளது என்றால் சரிதான். காலப்போக்கில் எங்கள் இடத்தையும் சேர்த்து சாலை விரிவாக்கம் செய்யப்பட்டது என்றால் தெரியாது.

16. பிராதுதபசில்சொத்தில் 4 ¼ செண்ட் உள்ளது, அதில் தான் பங்கு கேட்கிறோம். நான் பிராது தபசில்சொத்தை அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

17. பிரதிவாதி தாய்மாமன் முறையில் எனது பிள்ளைகளுக்கும், 2ம் வாதி பிள்ளைகளுக்கும் எந்தசீர்வரிசையும் செய்யவில்லை, எங்களுக்கே அவர் செய்யவில்லை. 1997ம் ஆண்டு முதலே பிரதிவாதிக்கும், எங்களுக்கும் பேச்சுவார்த்தை இல்லை.

18. 2ம் வாதியின் பிரவச செலவை பிரதிவாதிதான் பார்த்தார் என்றால் எனக்கு தெரியாது. செண்பககுத்தாலம், சண்முகவேல் என்ற உறவினரை தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் எதிருரை பாரா 7ல் உள்ள சங்கதிகளை பொறுத்து விசாரித்தோமா என்றால் இல்லை. 15.10.1998ல் குடும்ப ஏற்பாடு நடந்தது என்றால் சரியல்ல, அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. குடும்ப ஏற்பாட்டில் பிராதுதபசில் சொத்து பிரதிவாதிக்கும், நகை , சீர் எங்களுக்கு செய்ததால் சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என பேசிமுடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

19. குடும்ப ஏற்பாட்டின் அடிப்படையில் பிராதுதபசில்சொத்து எனது சகோதரர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பூர்வீகவீடு இருந்த இடத்தில் புதுவீடு கட்டியுள்ளார் என்றும், அதற்கு ரூ.5லட்சம் செல்வு செய்தார் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு பிராதுதபசில்சொத்து அனுபவ பாத்தியம் மூலம் கிடைத்து, அவர் தனியாக அனுபவத்தில் இருந்து வருவதால் எங்கள் உரிமை Ouster ஆகிவிட்டது என்றால் சரியல்ல. எனது வழக்கு காலவாதிதோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**